# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

## 2021 – 2022

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. இறைபணிக்காக வந்து தமிழ்ப்பணி செய்த ஐரோப்பியர்

அ ) வீரமாமுனிவர் ☐ ஆ ) தனிநாயகம்அடிகள் ☐

இ ) தேவநேயப்பாவாணர் ☐ ஈ ) ஆறுமுகநாவலர் ☐

2. போர்க்களத்தில் கொட்டும் முரசு

அ ) கொடைமுரசு ☐ ஆ ) மணமுரசு ☐

இ ) போர்முரசு ☐ ஈ ) பெருமுரசு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. அழுத என்பது

அ ) பெயரெச்சம் ☐ ஆ ) வினைமுற்று ☐

இ ) வினையெச்சம் ☐ ஈ ) பெயர்ச்சொல் ☐

4. அடாது செய்தவர் படாது படுவர். என்ற பழமொழி கூறும் கருத்து

அ ) வறுமையிலும் செம்மையாய் இரு. ☐

ஆ ) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். ☐

இ ) மனநிறைவற்ற நிலை. ☐

ஈ ) தீயன செய்தோர் துன்புறுவர். ☐

5. யாழ்ப்பாண அரசு வலிமை பெற்றிருந்த நூற்றாண்டு

அ ) 13 ☐ ஆ ) 17 ☐

இ ) 16 ☐ ஈ ) 14 ☐

TEDC

6. சாமரம் என்றால்

அ ) தாமரை ☐ ஆ ) விசிறி ☐

இ ) அறிவு ☐ ஈ ) அழகு ☐

7. ஒழுக்கம் இல்லாதவனிடம் __________ இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்.

அ ) தாழ்வு ☐ ஆ ) மகிழ்வு ☐

இ ) உயர்வு ☐ ஈ ) வாழ்வு ☐

8. பின்வருவனவற்றுள் துளைக்கருவி

அ ) மேளம் ☐ ஆ ) யாழ் ☐

இ ) புல்லாங்குழல் ☐ ஈ ) வீணை ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

9. அடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) கல்விகேள்வி ☐ ஆ ) இராப்பகல் ☐

இ ) கலகல ☐ ஈ ) ஓடிஓடி ☐

10. இராவணனைக் காட்டிக்கொடுத்த இரண்டகன்

அ ) வீடணன் ☐ ஆ ) இராமன் ☐

இ ) வாலி ☐ ஈ ) கதிர்காமநாயகம் ☐

11. வன்னியின் பழமையான தலைநகரம்

அ ) கந்தரோடை ☐ ஆ ) நாகதீபம் ☐

இ ) பூநகரி ☐ ஈ ) யாழ்ப்பாணம் ☐

12. கரும்பலகை என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) கருமை + பலகை ☐ ஆ ) கரும் + பலகை ☐

இ ) கரிய + பலகை ☐ ஈ ) கரும்பு + பலகை ☐

TEDC

13. வள்ளுவர் சினத்துக்கு ஒப்பிடுவது

அ ) வெள்ளத்தை ☐ ஆ ) தீயை ☐

இ ) மழையை ☐ ஈ ) காற்றை ☐

14. கதிரவனை நோக்கியவாறு தவம் கிடக்கும் மலர்

அ ) செவ்வந்தி ☐ ஆ ) முல்லை ☐

இ ) மல்லிகை ☐ ஈ ) சூரியகாந்தி ☐

15. வன்னிப்பெருநிலப்பரப்பு பழந்தமிழர் வாழ்ந்த பகுதியாகும். இது

அ ) மெய்ப்பாட்டுச்சொல்லியம் ☐ ஆ ) வினாச்சொல்லியம் ☐

இ ) ஏவற்சொல்லியம் ☐ ஈ ) கூற்றுச்சொல்லியம் ☐

16. ______________ உள்ளவரிடம் செல்வம் சேராது.

அ ) அழுக்காறு ☐ ஆ ) ஏக்கம் ☐

இ ) கல்வி ☐ ஈ ) சினம் ☐

17. பாய்ந்தன என்பது

அ ) ஆண்பால் ☐ ஆ ) ஒன்றன்பால் ☐

இ ) பலர்பால் ☐ ஈ ) பலவின்பால் ☐

18. மாணவர்கள் விளையாட்டுத்திடலுக்கு ______________ ச் சென்றனர்.

அ ) அணிஅணியாக ☐ ஆ ) விடிய விடிய ☐

இ ) வீடுவீடாக ☐ ஈ ) மடமட ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

19. வன்னிக்குறிப்பு என்ற நூலை எழுதியவர்

அ ) றொபேட்நொக்சு ☐ ஆ ) யே.பி.லூயிசு ☐

இ ) ஈ.டபிள்யு அதிகாரம் ☐ ஈ ) லயனல்சரத் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

20. விற்றான் என்ற வினைமுற்றின் வினையெச்சம்

அ ) வில் ☐ ஆ ) விற்ற ☐

இ ) விற்று ☐ ஈ ) விற்றவன் ☐

21. நல்லவர்க்குச் செய்த உதவியானது ________ செதுக்கிய எழுத்துப் போல நிலையாக இருக்கும்.

அ ) கல்லில் ☐ ஆ ) நீரில் ☐

இ ) மண்ணில் ☐ ஈ ) நிலத்தில் ☐

22. அன்பரசி பாடலை இனிமையாகப் பாடினாள். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ ) பாடினாள் ☐ ஆ ) பாடலை ☐

இ ) இனிமையாக ☐ ஈ ) அன்பரசி ☐

23. உயிர் எழுத்துகளின் வகைகள்

அ ) 3 ☐ ஆ ) 2 ☐

இ ) 4 ☐ ஈ ) 5 ☐

TEDC

24. இசைக்கலை பற்றிக் கூறும் நூல்

அ ) நல்வழி ☐ ஆ ) திருக்குறள் ☐

இ ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) மணிமேகலை ☐

25. படித்தான் என்ற வினைமுற்றின் இடைநிலை

அ ) படி ☐ ஆ ) த் ☐

இ ) ஆன் ☐ ஈ ) இன் ☐

26. நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக விளையாடினோம். இதில் விளையாடினோம் என்பது

அ ) இறந்தகாலம் ☐ ஆ ) நிகழ்காலம் ☐

இ ) முக்காலம் ☐ ஈ ) எதிர்காலம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

27. மூதுரையை எழுதியவர்

அ ) ஔவையார் ☐ ஆ ) திருவள்ளுவர் ☐

இ ) இளங்கோவடிகள் ☐ ஈ ) கம்பர் ☐

28. சாமப்பண் பாடி இறைவனை மகிழ்வித்தவன்

அ ) அதியர்மான் ☐ ஆ ) செங்குட்டுவன் ☐

இ ) இராவணன் ☐ ஈ ) எல்லாளன் ☐

29. கூறிய என்ற பெயரெச்சத்தின் வினையடி

அ ) கூறு ☐ ஆ ) கூற ☐

இ ) கூறினான் ☐ ஈ ) கூறும் ☐

TEDC

30. வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆட்சி செய்த இடம்

அ ) தகடூர் ☐ ஆ ) பாஞ்சாலங்குறிச்சி ☐

இ ) நாஞ்சில் ☐ ஈ ) பறம்புமலை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**இந்த உலகமானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. மாந்தன் இப்பூமியில் நீடித்து வாழும் பொருட்டு இயற்கை தன் கொடைகளை வாரி வழங்கியுள்ளது. உண்கின்ற உணவிலிருந்து அருந்துகின்ற குடிநீர் வரை மாந்த வாழ்விற்கு அகத்தியமான அனைத்தையும் இயற்கை அளித்துள்ளது. பரந்து விரிந்த நிலப்பரப்புகளும்; பச்சைப்பசேலென்ற காடுகளும்; எழில் கொஞ்சும் நீர்வீழ்ச்சிகளும்; சலசலத்து ஓடுகின்ற ஆறுகளும் இயற்கையின் கொடைகளாகும். நம் முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். ஆனால் இன்று நாம் இயற்கையோடு ஒன்றிணையாமல் செயற்கையோடு பின்னிப் பிணைந்து வாழ்கின்றோம். இத்தகைய வாழ்க்கை எமக்குத் தீங்கைத் தரும். எனவே நாமும் இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.**

1. நம் முன்னோர் எவ்வாறு வாழ்ந்தனர்?

2. பச்சைப்பசேலென்று காணப்படுபவை எவை?

3. இன்று நாம் எப்படி வாழ்கின்றோம்?

4. இந்த உலகம் எதனால் நிறைந்துள்ளது?

5. ஆறுகள் எவ்வாறு ஓடுகின்றன?

TEDC

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. வன்னியின் அரசகுலமகளிர் ஒருவரின் பெயரைத் தருக.

______________________________

2. ‘‘தமிழுக்குத் தொண்டு செய்தால் அந்தத் தமிழ் உள்ளளவும் வாழ்வோம்’’ என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

______________________________

3. அன்னப்புள்ளின் கற்சிலை எங்கே உள்ளது?

______________________________

______________________________

4. திருக்குறளின் வேறு பெயர்களுள் ஒன்றைத் தருக.

______________________________

5. கயிலைவன்னியனது ஆட்சி எதுவரை பரந்திருந்தது?

______________________________

______________________________

6. ஏழிசை பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

7. சினங்காத்தலை ஔவையார் இரு சொற்களில் எப்படிக் கூறுகிறார்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## பூக்கள்

| | | |
|---|---|---|
| காலை | இன்பம் | குடிக்கும் |
| செடிகளில் | வண்ண | |

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
சின்னச் சின்னச் ______________
வண்ண வண்ணப் பூக்கள்
______________ நேரம் மலர்ந்திடும்

வண்டு வந்து பாட்டுப் பாட
______________ மலர்கள் ஆடுமாம்
தென்றல் வந்து தழுவிச் செல்ல
மகிழ்ந்து ______________ காணுமாம்

தேன் ______________ வண்டுகள்
பசி இழந்து பறந்திட
களிப்படைந்த மலர்களும்
மெல்லச் சிரித்து மகிழுமாம்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   குணப்பெயர் ______________________

   படர்க்கை ______________________

   உயர்திணை ______________________

2. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

   கழனி ______________

   அகத்தியம் ______________

   தொல்குடி ______________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. படி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

   பெயர் ________________________________________

   வினை ________________________________________

4. நிகழ்கால இடைநிலைகள் எவை? ______________________

   அவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________

   ______________

5. தரப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

   கத்தரிக்காய் __________________

   தமிழ்ப்பாட்டு __________________

   கற்கோவில் __________________

TEDC

புள்ளிகள் 15

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

1. சிறு துரும்பும் ________________ க் குத்த உதவும்.

   ( பல்லு, பள்ளு )

2. புலவருக்குச் சேரமன்னன் ________________ புரிந்தான்.

   ( பனிவிடை, பணிவிடை )

3. நற்பண்பு உள்ளவரிடம் எல்லோரும் ________________ இருப்பர்.

   ( அன்பாய், அண்பாய் )

4. உழவன் வயலிலுள்ள ________________ ப் பிடுங்கினான்.

   ( கலைகளை, களைகளை )

5. இனவுணர்வுள்ள மாபெரும் ________________ மாற்றானுக்குத் துணை போகமாட்டான்.

   ( வீரன், வீறன் )

புள்ளிகள் 05

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ வீரஞ்செறிந்த வன்னியும் தமிழரசுகளும்
- ✸ இலக்கிய இன்பம்
- ✸ நண்பர்கள்
    - ➢ நட்பு என்றால் என்ன?
    - ➢ உமது நெருங்கிய நண்பர்களின் பெயர்கள்
    - ➢ அவர்களிடம் உள்ள நற்குணங்கள்
    - ➢ நல்ல நண்பர்களினால் ஏற்படும் நன்மைகள்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புள்ளிகள் 20

TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC